மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடத்திற்கான இடத்தை நீங்கள் வழங்குகின்றபட்சத்தில் கண்டிப்பாக அது செய்து தரப்படும். அதேபோன்று, நீங்கள் போட்டித் தேர்வுக்கென்று தனியாக பயிற்சி மையங்கள் உள்ளிட்ட வசதிகள் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நிறைய rural area–வில் அதற்கான resource இல்லாமலேயே இருக்கின்றது. Rural area–ல் படிக்கின்ற குழந்தைகளுக்கு போட்டித் தேர்வுக்குப் பயிற்சியாளர்கள் வர வேண்டுமென்று சொன்னால், யாரும் கிராமப் பகுதிகளுக்குச் செல்லமாட்டேன் என்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டுதான், நம்முடைய கல்வித் தொலைக்காட்சியிலே அதற்கென்று தனியாக நேரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதையும் ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார். அதற்கான பணியிலும் நாங்கள் எங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டதுமாதிரி, அந்த இடம் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் பேசி, அதற்கான இடம் எங்களுக்கு வழங்கப்படும்போது, தேவைப்படுமெனில் கண்டிப்பாக அதற்குக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

240—

விளையாட்டு மைதானம்

***10104—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு முன்வருமா?

2022 மே 6]

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி சட்டமன்றத் தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் உள்ள கமலநத்தம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், விதி 110-ன்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு நவீன விளையாட்டரங்கம் அறிவித்ததை நான் மனதார வரவேற்கிறேன். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேவேளையில் சட்டமன்றத் தொகுதிக்கு ஒன்று என்று இருப்பதைப்போல, ஒவ்வோர் ஊராட்சியிலும் இளைஞர்கள், கிராமப் பகுதிகளில் நிறைய மாணவர்கள் ** செல்லாமல் இளைஞர்களின் ஆரோக்கியத்தையும், மன வலிமையையும், உடல் நலத்தையும் பேணும்விதத்தில் கிராமங்கள்தோறும் கடந்த காலத்தில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் விளையாட்டு மைதானம் ஆரம்பிக்கப்பட்டது. அதைப்போல, ஒவ்வோர் ஊராட்சியின் மையப் பகுதியிலும், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம்; டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, வெள்ளக்கல்; பாகலஅள்ளி ஊராட்சி, பட்டகபட்டி போன்ற கிராமப் பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்தால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி வழங்கி நாங்கள் விளையாட்டு மைதானம் அமைப்போம். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இதனைச் செய்வதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாணவர்கள் ** பேசிய வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி சட்டமன்றத் தொகுதியில், தருமபுரி மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்குட்பட்ட பகுதி உள்ளது. அந்த மாவட்ட விளையாட்டரங்கில் நிறைய வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியிலும் தமிழக அரசால் ஒரு கைப்பந்து மைதானம், கபடி மைதானம், கிரிக்கெட் மைதானம் அமைக்கப்பட்டு அவையும் பயன்பாட்டில் உள்ளன. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன குக்கிராமங்களுக்கும் இந்த விளையாட்டு மைதானத்தைக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற அந்த நல்ல எண்ணத்தில் அவர் எடுத்திருக்கின்ற நடவடிக்கை சிறப்பு வாய்ந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் வலியுறுத்தியிருக்கின்றார்கள் என்கின்ற அடிப்படையில், கமலநத்தம் ஊராட்சியில் ஒரு கைப்பந்து மைதானம், ஒரு கபடி மைதானம், ஒரு கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, இந்த ஆண்டே அது செயல்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மனதார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் ஏ.ஜெட்டி அள்ளி ஊராட்சி. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நன்றி*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2022 மே 6]

சொல்லிவிட்டீர்களே, பிறகு என்ன?

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *ஒரே ஒரு கேள்வி இருக்கிறது. ஏ.ஜெட்டி அள்ளி ஊராட்சி, ஒட்டப்பட்டி பகுதியிலே வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் 50,000 மக்கள் வசிக்கும் மையப் பகுதியில் 7 ஏக்கர் நிலம் உள்ளது. அங்கு நவீன விளையாட்டரங்கம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற இந்த ஓராண்டுக் காலத்தில் விளையாட்டுத் துறைக்காக, இதுவரை இல்லாத அளவுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில், பிரேசில் நாட்டில் மே மாதம் 1 ஆம் தேதி முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாற்றுத் திறனாளி வீரர்கள், செவித்திறன் குறைந்தவர்களுக்கான ஒலிம்பிக் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கான செலவை ஏற்று, அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள். தற்போது, அவர்கள் அந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வருகின்றார்கள். அந்த விளையாட்டுப் போட்டிகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், அவர்கள் பங்கேற்கும்போதே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு தமிழகத்தைச் சார்ந்த அந்த 6 வீரர்கள், வீராங்கனைகளுக்கு தலா ரூ.1 இலட்சம் வீதம் ஊக்கத் தொகை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு ஆற்காடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான

நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். தொடர்ந்து இதுபோன்ற பணிகளைச் செய்வதன்மூலம், இளைஞர்களை மாற்று வழிக்குக் கொண்டுவருவது மிகவும் முக்கியம். ஆக, கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர் வசிக்கக்கூடிய அந்த வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதியில் 7 ஏக்கர் அளவுக்கு இடம் இருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். அது கண்டறியப்பட்டு, மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற, சட்டமன்றத் தொகுதியில் ஒரு மினி விளையாட்டரங்கம் என்ற அந்தத் திட்டத்தின்கீழ் எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாட்டிலே கால்பந்தாட்ட குழுக்கள் அதிகம் உள்ள மாவட்டம் ஆகும். ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்தபோது அங்கு நேரடியாக வந்து, கால்பந்தாட்டத்தை ஊக்குவிக்கின்ற வகையில், பல போட்டிகளை நடத்தி, பரிசுகளை வழங்கியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட ஆவடி, திருவள்ளூர், பூந்தமல்லி ஆகிய பகுதிகளில் உலகத்தரம் வாய்ந்த கால்பந்தாட்ட மைதானத்தை அமைத்துத் தர வேண்டும்.

அதேநேரத்தில், பூந்தமல்லி தொகுதிக்குட்பட்ட காக்களூர் கிராமம், காமன்வெல்த் போட்டியில் இந்தியாவிலேயே முதன்முறையாகப் பரிசு பெற்ற திரு. கருணாகரன் அவர்கள் பிறந்த ஊராகும். மேலும், காக்களூர் திரு. அன்பு என்பவர் பளு தூக்கும் போட்டியில், Power lifting competition–ல் உலகளவிலே இரண்டாம் இடத்தில் பரிசு பெற்று, 2006–2011 ஆம் ஆண்டு ஆட்சியில் ரூ.10 இலட்சம் பரிசும், வீடும் அவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அப்போது வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: அப்படிப்பட்ட சிறப்புவாய்ந்த காக்களூர் கிராமத்தில் Body building, Power lifting, Weight

2022 மே 6]

lifting *தகுதிக்கான ஒரு* Academy*–ஐத் தொடங்கி, ஓர் உள் விளையாட்டரங்கம் அமைத்துத் தர முடியுமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்திற்குட்பட்ட ஆவடி, திருவள்ளூர் பகுதியில் உலகத்தரம் வாய்ந்த கால்பந்தாட்ட மைதானம் ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற அந்த காக்களூர் பகுதியானது பளு தூக்கும் வீரர்கள், வீராங்கனைகள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கின்ற நகரச் செயலாளர் அவர்களுடைய மகள் இன்றைக்கு இந்திய அளவிலே சாதனை படைத்திருக்கின்றார். அந்தப் பகுதியில் பளு தூக்கும் வீரர்கள் நிறைந்து இருக்கின்றார்கள். கண்டிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, காக்களூர் பகுதியில் பளு தூக்கும் Academy *ஒன்றைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக அனைத்து வசதிகளுடன்கூடிய விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

[2022 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்காக தனியாக விளையாட்டு மைதானம் அமைக்கப்படுமா என்று இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் ஒரு Badminton Court அமைக்கப்பட்டு, இப்போது அது செயல்பாட்டில் இருக்கின்றது. மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் இருக்கின்ற உடற்பயிற்சிக்கூடம் விரைவிலே நவீனப்படுத்தப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்படுத்தக்கூடிய அளவில் செயல்படுத்தப்படும்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 241, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

241—

சுற்றுலாத் தலம்

***5228—திரு. செல்லூர் கே. ராஜூ:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தை சுற்றுலாத் தலமாக அறிவித்து, அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.